செ.வெ.எண்: 716 நாள்: 24.10.2019

# அன்னவாசலில் மத்திய கூட்டுறவு வங்கியின் 24வது புதிய வங்கி கிளையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

---

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசலில் மத்திய கூட்டுறவு வங்கியின் 24வது புதிய வங்கி கிளையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (24.10.2019) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற கூற்றிற்கிணங்க விவசாயிகளின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தமிழக அரசு கூட்டுறவுத்துறையை மிக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு அறிவிக்கும் அனைத்து மானிய திட்டங்கள் உள்ளிட்ட விவசாயிகளுக்கான அரசின் நலத்திட்டங்கள் கூட்டுறவு வங்கிகளின் மூலமே வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் அன்னவாசலில் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 24வது வங்கி கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு பயிர்கடன், மத்தியகால பயிர் கடன், குறுகிய கால பயிர்கடன் , சுயஉதவிக் குழுக்கடன், மாற்றுத்திறனாளிகளுக்கு கடன், வீட்டுவசதிக் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்கள் வழங்கப்படுகிறது.

இதற்கு முன்பு இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மேற்கண்ட வங்கி சேவைகளைப் பெற இலுப்பூர் மற்றும் புதுக்கோட்டையில் உள்ள வங்கிகளை அணுக வேண்டியிருந்தது. தற்பொழுது அன்னவாசலில் திறக்கப்பட்டுள்ள இவ்வங்கியின் மூலம் அன்னவாசல் மற்றும் சுற்றுவட்டாரத்தை சார்ந்த 18 கிராம விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. அதனை அப்பகுதி மக்கள் தங்கள் வாழ்வின் முன்னேற்றதிற்கு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவு வங்கியின் செயிலியினை அறிமுகப்படுத்தியும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு ரூ.1.17 கோடிக்கான கூட்டுறவு கடனையும், 2 நபர்களுக்கு சிறு வணிக கடனாக தலா ரூ.25,000 வழங்கியதுடன், வாடிக்கையாளர்களுக்கான புதிய வங்கி சேமிப்பு கணக்கினையும் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.இரா.சின்னதம்பி, புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் அருள்அரசு, கூட்டுறவு சங்கத் தலைவர் வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் சாம்பசிவம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**